நகல்

ஸ்ரீ

மதுரைத் தமிழ்ச்சங்கம்
மதுரை. 5-12-25

மஹாமஹோபாத்யாய ஐயரவர்களுக்கு செந்தமிழ்ப் பத்திராதிபன் இராமாநுஜன் அநேக நமஸ்காரம் செய்து தெரிவித்துக் கொள்ளும் விண்ணப்பம். உபயக்ஷேமோபரி

தாங்கள் பதிப்பித்த நன்னூல் (சங்கர நமச்சிவாயருரைப்பிரதி) ஒன்று தங்களுத்தரவின் வண்ணம். ம.ள.ள.ஸ்ரீ. டி. ஸி. ஸ்ரீநிவாஸய்யங்காரவர்களால் மனமுவந்து தரப்பெற்றுக் கிருதார்த்தனானேன் இதற்கு யான் என்ன கைம்மாறு செய்யவல்லேன் தாங்கள் இன்னும் நெடுங்காலம் வீற்றிருந்து இத்தகைய பலநன்னூல்களை வெளியிட்டு என்போன்றோர்க்கு நல்லுணர்வு ஊட்டிவர அருள்புரியுமாறு எல்லாம் வல்ல இறைவனை வணங்குவதே யான் செய்யத்தக்கதாயுள்ளது. புத்தகம் பெற்றவுவகையால் யான் எழுதிய பின்வருங் கவிகளிலுள்ள பிழைகளைப் பொறுத்து அங்கீகரித்தருளவேண்டுகிறேன்

தென்னாப் புலவர் சிகாமணியாய் வீற்றிருக்குஞ்
செந்நூற் பொருளை யெடுத்துரைப்போய் — நன்னூலும்
மின்னப் புரையறுநின் மெய்க்கழல்கள் எஞ்ஞான்றுமென்
சிந்தை நிலவவருள் செய்.

திருந்து தமிழ்ப்புலவர் தெய்வமே யாரும்
அருந்தமிழ்நூ லெல்லாம் பதித்தா யச்சிற் — பொருந்தவவை
கற்றுணர வல்லார் கருத்திற் பதிந்தனவென்
சொற்றுணை வல்ல துதி.

இங்ஙனம் தங்கள் விதேயன்

ரெ.கி. இராமாநுஜன்

நகல்

46 ௫-12-25

5428

மதுரைத்தமிழ்ச்சங்கம்
மதுரை
திரு. கி. ராமானுஜய்யங்கார்.

Pg: 131, 132.

Pg. 130 - 132.
த. க. VOL 'Q'

25